# “இந்தக் கோடை நம் வீட்டிற்கு வெப்பத்தைத் தராது!”

ஆர்ஜில் கூல்ரூஃப் டைல்களின் அதிரடி பாதுகாப்பு

ARGIL® The Tile Expert

இந்த கோடை ஒட்டுமொத்த தமிழ்நாட்டிற்கே சற்று சோதனையான காலம்தான். வழக்கத்தை விட அதிக மான வெப்பம் இந்த ஆண்டு இருக்குமென ஒருபுறம் வானிலை ஆராய்ச்சி நிலையங்கள் நம்மை பயமுறுத்த, மறுபுறம் 4 மணி நேரம், 8 மணி நேரம் மின்வெட்டு நீடிக்கும் என மின்வாரியமும் தங்கள் பங்கிற்கு நம்மை பயமுறுத்துகின்றன.

பகலில், நேரடி வெப்பத்திலும், இரவில் புழுக்கத்திலும் சிக்கித் தவிக்கப்போவது நாம்தான் என்றாலும், “கொஞ்சம் கூட கவலைப்படாதீர்கள். இந்தக் கோடை, உங்கள் வீட்டிற்கு வெப்பத்தைத் தராது. அதற்கு நாங்கள் கேரண்டி” என்கிறார் தமிழகம் முழுவதும் ஆர்ஜில் கூல் ரூஃப் டைல்ஸ்களை விற்பனை செய்து வரும் CDS ஏஜென்சிஸ் நிறுவனத்தின் உரிமையாளர் திரு. CDS ரவிச்சந்திரன் அவர்கள்.

“ சாதாரணமான ரூஃப் டைல்கள் வாட்டர் புரூஃபிங் மற்றும் ஹீட் புரூஃபிங் தன்மை அற்றவையாகும். மழைக்காலங்களில் ஈரத்தையும், கோடை காலங்களில் உஷ்ணத்தையும் உள்வாங்கி நம்மை பாடாய்படுத்தும். ஆனால், ஸ்பானிஷ் நாட்டு தொழிற்நுட்பத்துடன் இந்தியாவில் தயாராகும் ஆர்ஜில் டைல்கள் ‘ஜிர்கானியம்’, ‘டைட்டானியம்’, ‘என்கோபின்’ கோட்டிங் உள்ளதால், 80 சதவீத வெப்பத்தை பிரதிபலித்துவிடுகிறது. இதனால், எவ்வளவு வெயில் அடித்தாலும், நமது தளப்பரப்பு சுடுவதே இல்லை. வெப்பத்தை உள்வாங்குவதில்லை என்பதால், நமது வீட்டின் அறைகள் ஒருபோதும் வெப்பமாவதில்லை. புழுக்கமான நிலை ஏற்படுவதில்லை. இதனால், நாம் ஏசிக்கு செலவழிக்கும் மின்சாரம் பெருமளவு மிச்சமாவதுடன், உள்கூரை சீலிங்கிற்காகவும், சுவர்களின் இன்சுலேஷனுக்காகவும் நாம் ஒரு பைசா கூட செலவழிக்க வேண்டியதில்லை.

இதுமட்டுமின்றி, நீரை உள்வாங்கும் பேச்சிற்கே இடமில்லை என்பதால், மழைக்காலங்களிலும் ஆர்ஜில் டைல்கள் நமக்கு கூடுதல் பாதுகாப்பைத் தருகிறது. நீர்க்கசிவு என்கிற நிரந்தரத் தொல்லையும் நம்மை விட்டு அகலுகிறது

மேலும், சாதாரண கூரையின் மேல் நமது விருப்பத்திற்கேற்ப மொட்டை மாடி தோட்டங்கள் மற்றும் கூரைத் தோட்டங்களை அமைப்பது யோசிக்க வேண்டிய விஷயமாகும். ஏனெனில், மண்ணின் ஈரம் கூரையில் ஊடுருவி முழுக்கட்டுமானத்தையே பாதித்துவிடும் என்பதுதான். ஆனால், ஆர்ஜில் டைல்கள் அமைக்கப்பட்ட கூரையில் இது குறித்து நீங்கள் அச்சப்பட வேண்டியதில்லை இக்கூரையின் மேல் பிளாஸ்டிக் தாள் ஒன்றை விரித்து அதன் மேல் உங்கள் விருப்பப்படி அழகுத் தோட்டங்களை அமைத்துக் கொள்ளலாம்.

சந்தையில் இது போன்ற எண்ணிலடங்கா பயன்களைக் கொடுக்கும் டைல்களை நீங்கள்

## அசத்தும் ஆர்ஜில் டைல்ஸ்

வெப்பத்தை உள்வாங்காத அருங்குணம்தான் ஆர்ஜில் டைல்ஸின் மிகமுக்கிய பிளஸ் பாயிண்டாகும். ஜிர்கானியம் மற்றும் டைட்டானியம் கோட்டிங்தான் இதற்கு காரணமாக இருக்கிறது.

சந்தைக்கு வந்த 2 வருடங்களிலேயே இதுவரை 500க்கும் மேற்பட்ட வாடிக்கையாளர்கள் தங்கள் வீடுகளின், மாடித்தளங்களை ஆர்ஜில் டைல்கள் கொண்டு அமைத்திருக்கின்றனர்.

ஆர்ஜில் டைல்களைப் பொருத்துவதற்கென தனிப்பட்ட தொழிற்நுட்பம் எதுவும் தேவையில்லை. சி.டி.எஸ். நிறுவனமே, டைல்களை பொருத்தும் பணியை செய்துத் தருகிறது.

ஆர்ஜில் டைல்களை பராமரிப்பது சுலபம். எத்தனை கறை படிந்தாலும், ஒரு சாதாரண கிளீனரை உபயோகித்தால் போதும். எளிதில் சுத்தமாகிவிடும். இது தீயினால் சேதமுறாத பொருள். அமிலம், ரசாயனம் போன்ற எதையும் தாங்கும் வல்லமை கொண்டது.

காண்பதரிது" என்கிறார் சி.டி.எஸ். ரவிச்சந்திரன்.

**ஆர்ஜில் கூல் ரூஃப் டைல்ஸ்ன் தரத்தைப் பற்றிக் கூறுங்களேன்..**

"ஆர்ஜில் டைல்ஸ்களுக்கான மூலப்பொருட்கள் ஸ்பெயினிலிருந்து வரவழைக்கப்பட்டு குஜராத்தில் உள்ள தொழிற்சாலையில் தயாரிக்கப் படுகிறது. ISO 9001 தரச்சான்று பெற்ற இந்நிறுவனம் 1950ல் தொடங்கப்பட்டு இன்றுவரை சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது.

ஆர்ஜில் ரூஃப் டைல்ஸின் தடிமன் 6 மி.மீ. ஆகும். இது 8 அங்குலத்திற்கு 8 அங்குலம் சதுர வடிவில் தயாரிக்கப்படுவதாகும். இதில் விரிசல்கள் விழாது. பாசி பிடிக்காது. சாதாரண டைல்ஸ்களைப் போலவே இதனைப் பொருத்தலாம். இதனை வெட்டுவதற்கென எந்த தனி கட்டரும் தேவையில்லை. கான்கிரீட்டின் மேல் எப்போதும் வைக்கும் செங்கல், ஜல்லி கலவையும் தேவைப்படாது.

பொதுவாக எந்த கட்டுமானப் பொருளுக்கும் உத்திரவாதம் கிடையாது. ஆனால் ஆர்ஜில் டைல்களுக்கு 5 வருட உத்திரவாதத்தினை எங்கள் நிறுவனம் வழங்குகிறது. இதனை பொருத்தியபிறகு ஏதேனும் மிகவும் கனமான பொருள் விழுந்து டைல்கள் உடைந்தால் கூட உடனே அதனை நாங்கள் மாற்றித் தருகிறோம்."

**சில்லறையாக ஆர்ஜில் டைல்ஸ் வாங்கும் பொதுமக்களுக்கு ஓ.கே. மொத்தமாக வாங்கும் கட்டுநர்களுக்குக் கூடுதல் நன்மைகளாக நீங்கள் குறிப்பிடுவது என்ன?**

"ஒவ்வொரு பில்டரும் தங்களுடைய புராஜெக்டின் சிறப்பு அம்சங்களாக ஒரு பட்டியலை வெளியிடுவார்கள். அவற்றுள், 'எங்கள் புராஜெக்டு ஆர்ஜில் டைல்களால் அமைக்கப்பட்ட கூரை உடையது' என சொல்வது அவர்களது புராஜெக்டிற்கு கூடுதல் சிறப்பினை உண்டாக்கும்.

பில்டர்களின் நெடுநாளைய தலைவலியான நீர்க்கசிவிற்கு தீர்வை அளிக்கும் இந்தப் பொருள், 'கட்டுநர்களின் நண்பன்' என்றே சந்தையில் அழைக்கப்படுகிறது.

வாங்கும் அளவைப் பொறுத்து கட்டுநர்களுக்கு விலையில் சலுகை



ஆர்ஜில் டைல்கள் பொருத்தப்பட்ட மொட்டை மாடி தளம்

உண்டு. பெரிய புராஜெக்டுகள் என்றால் சைட்டிற்கே நேரடியாக தொழிற்சாலையில் இருந்து வரவழைத்து தந்துவிடுகிறோம். இதில் போக்குவரத்துச் செலவு, ஆட்களுக்கான கூலிச்செலவு ஆகியவற்றை பில்டர்கள் சலுகையாகப் பெறமுடியும். தமிழ்நாட்டில் மட்டுமல்ல, தென்னிந்தியா முழுமைக்கும் இந்தச் சலுகையை சி.டி.எஸ். நிறுவனம் தருகிறது.

மேலும், பில்டர்களுக்கு மட்டுமல்லாமல் ஆர்ஜில் டைல்ஸ்கள் வாங்கும் அனைவருக்கும், நாங்கள் செய்யும் இன்னொரு கூடுதல் சேவை பெரும் வரவேற்பை பெற்றுள்ளது. அதுதான் புராஜெக்டின் சுற்றுப்புறம் முழுவதும் பசுமையாக்க, மரக்கன்றுகளை இலவசமாக அளிப்பது. பசுமையான சுற்றுப்புறம் என்பது ஆர்ஜில் டைல்ஸின் இன்னொரு அடையாளம்." என்கிறார் சி.டி.எஸ். ரவிச்சந்திரன்.

தமிழகம் முழுவதும் பரவலாக கிடைக்கும் ஆர்ஜில் டைல்களை எல்லா மாவட்டங்களிலும் சந்தைப்படுத்தும் முயற்சியில் இருக்கிறது சி.டி.எஸ். நிறுவனம். அதன் ஒரு பகுதியாக ஒவ்வொரு மாவட்டத்திற்கும் முகவர்களை நியமிக்கும் பணி மும்முரமாக நடந்து வருகிறது.

அதிக புழுக்கம், நீர்க்கசிவு, ஏசிக்கான மின்செலவு, ஏசிக்கான ஃபால்ஸ் சீலிங், கூரையை ஈரப்படுத்தும் மாடித் தோட்டம் போன்ற பலவித பிரச்சனைகளை தீர்க்கும் ஒரே கட்டுமானப் பொருளான ஆர்ஜில் டைல்களை சில்லறையாகவோ, மொத்தமாகவோ பெற 9443728851 என்ற எண்ணிற்கு தொடர்பு கொள்ளலாம்.



சி.டி.எஸ். ரவிச்சந்திரன்.

கட்டுநர்களும், சொந்த வீடு கட்டும் பொதுமக்களும், மற்றும் தமிழகம் முழுவதும் ஆர்ஜில் டைல்ஸ்களுக்கு ஏஜென்சி எடுக்க விரும்பும் அனைவரும் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி இதோ :

CDS Agencies

122, ஆற்காடு சாலை, வளசரவாக்கம்,

சென்னை-87. **Ph : 9443728851, 9597505067**